இலங்கையின் முதலாவது

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 239
தேசிய தினசரி

சகிலவுனை வேட புரட்டாதி 21 றஜப் 14 திங்கட்கிழமை (7-10-68)

## சத்திர சிகிச்சை நோயாளி

### டிக்கிரி மெனிக்கா காலமானார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் முதலாவதாக 'இருதய மாற்று' சத்திரசிகிச்சை செய்யப்பட்ட 21 வயதான டி. எம். டிக்கிரி மெனிக்கா இன்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமாகிவிட்டார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஹோப் கப்பல் டாக்டர் ஒருவரின் உதவியுடன் டாக்டர் ஏ. பி. ஏ. போல், மாவத்தகமையைச் சேர்ந்த டிக்கிரி மெனிக்காவுக்கு சத்திரசிகிச்சை அடைப்பிதழை

[8-ம் பக்கம் பார்க்க]

### விண்வெளிக்கு அமெரிக்கர்

வாஷிங்டன், ஒக். 6

மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தின்படி அடுத்த வெள்ளிக்கிழமை மூன்று விண்வெளிவீரரை அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பவிருக்கிறது. இவ்விண்வெளிவீரர்கள் பூமியை சுற்றி 45 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்வர். நந்தார் விடுமுறையின்போது

[8-ம் பக்கம் பார்க்க]

# யாழ். நகரில் நேற்று மேலும் மூன்று குழந்தைகள் பலி

## நோயின் மர்மம் இன்னும் நீடிக்கிறது

நல்லூர், திங்கள்

**யாழ்ப்பாணப் பகுதிகளில் குழந்தைகளைப் பீடித்து வரும் மர்ம வயிற்றோட்ட நோய்க்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலையும் மூன்று குழந்தைகள் பலியாகின.**

சென்ற சில வாரங்களாக யாழ்ப்பாணப் பகுதியில் பல குழந்தைகளின் உயிரைப் பலி கொண்ட இந்த மர்ம வயிற்றோட்ட நோய் பற்றி கொழும்பிலிருந்து சுகாதார இலாகாவைச் சேர்ந்த நிபுணர் கோஷ்டியொன்று இங்கு வந்து ஆராய்ச்சி செய்து வருகிறது. முதலில் நடத்திய பரிசோதனைகளிலிருந்து 'ஷிகெல்லா' என்ற கிருமியினால் தான் இந்நோய் ஏற்பட்டதென்றும் கதிர்காமத்துக்குச் சென்று திரும்பிய ஒரு கோஷ்டியைச் சேர்ந்த ஒரு குழந்தைக்கு இந்நோய் தொற்றியதென்று பகுதித் துறையைச் சேர்ந்த இக் குழந்தை மரணமானதைத் தொடர்ந்துதான் இந்நோய் இங்கு பரவத் தொடங்கியதென்றும் அந்த நிபுணர்களும் சுகாதாரப் பகுதியினரும் நடாத்திய ஆராய்ச்சிகளிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இந்நோய் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்தும் கொழும்புத் துறைமுகத்தில் தங்கியிருக்கும் அமெரிக்க வைத்தியக் கப்பலான ஹோப் கப்பலிலிருந்தும் அவசரமாக இங்கு மருந்துகள் வரவழைக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து இங்கு நிலைமை சீரடைந்து வருவதாகத் தோன்றியது. ஆயினும் சுகாதார இலாகா நிபுணர்கள் நடாத்திய பரிசோதனைகளில் குழந்தைகள் விஷ பத்திரம் தான் 'ஷிகெல்லா' என்ற கிருமியினால் இந்த நோய் ஏற்படக் காரணமாக இருந்ததாகவும் இதர குழந்தைகள் விஷபத்திர நோய்வேறுவிதமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது. இந்த மர்மநோய் பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிகளும் பரிசீலனைகளும் நடைபெற்று வருகின்றன.

குழந்தைகளை பீடித்துள்ள இந்த மர்மநோய் பற்றி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கும் சுகாதார இலாகா அதிகாரிகளுக்கும் கவலையையும் பெருந்தொல்லையை கொடுத்துவருகிறது.

## 'இலங்கையிலும் மாணவர் இயக்கங்கள் உருவாகலாம்

### பட்டதாரிகள் கூட்டத்தில் உபசபாநாயகர்

யாழ்ப்பாணம், திங்கள்

வாலிபர்கள் மத்தியில் உள்ள எண்ணங்களை அவர்களின் உள்ளக் கருத்துக்களை அரசாங்கம் அறியவில்லை. சில நாடுகளில் இன்று நடப்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அரசியல், பொருளாதாரத் துறையில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக இன்று சில நாடுகளில் வாலிபர்கள், குறிப்பாக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகிறார்கள். இவர்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள் தலைமைதாங்குகிறார்கள். இந்த நிலைமை இந்நாட்டிலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகி வருவதை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது.

வடஇலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை நேற்று மாலை யாழ்ப்பாணத்

[8-ம் பக்கம் பார்க்க]

## மாணவியோடு ஆசிரியரும் தலைமறைவாகி விட்டாராம்

### புத்தளம் பொலிசார் தேடுகிறார்கள்

கொழும்பு, ஞாயிறு

தமிழ் இளம்பெண் ஒருவருக்கு சிங்களம் படிப்பிக்க வந்த ஆசிரியர் அந்த யுவதியுடன் தலைமறைவாகிவிட்டாராம்.

இச்சம்பவம் புத்தளப்பகுதியில் நடைபெற்றுள்ளது. பெரும்பான்மை சமூகத்தவர்களின் மொழியான சிங்களத்தில் தன்மகளும் அறிவு

[8-ம் பக்கம் பார்க்க]

## 'இருபதாண்டு ஒற்றையாட்சியில் இன்னல்கள்தான் மிச்சம்

### சமஷ்டி ஒன்றேசுபீட்சத்துக்கு வழி' என்கிறார் அமிர்தலிங்கம்

சுழிபுரம், ஞாயிறு

"கடந்த இருபது ஆண்டுகளாக ஒற்றை ஆட்சிமுறையில் தமிழ் பேசும் மக்கள் அடைந்துவரும் இன்னல்கள் சொல்லவொண்ணாதவை. மக்களின் இன்னல்களை களைந்து ஓர் சுபீட்சமான பாதையை காண வேண்டும் என்ற நோக்கோடு இந்த நாட்டுக்கு சமஷ்டி அரசியலே சிறந்தது என்று கண்டு அவற்றைப் பெறப் பாடுபட்டு உழைத்து வருகின்றோம். இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களுக்குள் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற குரல் எழுப்பப்படுகிறது. ஒற்றுமை ஏற்படத்தான் வேண்டும். ஒன்றுபட்டால்தான் உண்டுவாழ்வு. ஒற்றுமை கொள்கையடிப்படையில் ஏற்படவேண்டும். இந்நாட்டுக்கு ஒற்றையாட்சியே சிறந்தது என தமிழ் காங்கிரஸ் கட்சியினர் கூறுகின்றனர். ஒற்றையாட்சி ஏற்றது அல்ல, அதிகாரத்தைப் பரவலாக்கும் சமஷ்டி அரசியலே மிகச் சிறந்தது. அதுதான் உலகநாடுகள் பலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நாட்டில் சிறந்தபயனைக் கொடுத்துள்ளது. அதனைப்பெறுவதே எமது நோக்கமாகும். இந்த வகையில் வேற்றுமைப்பட்டு நாம் எப்படி ஒற்றுமையாக வாழமுடியும். ஒற்றுமை கோரும் எழுப்புபவர்கள் எந்த வகையில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்பதை எடுத்துக்கூறவேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைக் கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற அரசி

(8-ம் பக்கம் பார்க்க)

## 284 பேர் மரணம்

கல்கத்தா, ஒக். 6

மேற்கு வங்காளத்தில் கடந்த நாலு நாட்களாக பெய்த பெரும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட [illegible] தோர் தொகை 284 [illegible] ஆகியுள்ளது.

(விபரம் 3-ம் பக்கம்)

செ. காசிப்பிள்ளை அன் கோ.

ஸ்தாபனத்தார் ஆகிய நாங்கள்

சி கே பி

என்னும் வியாபார ஸ்தாபனத்தை இன்று (7-10-68) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் வரும் சுபவேளையில் ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி கே பி

CEE KAY PEE

(பிடவை அன் பான்ஸி குட்ஸ் வியாபாரம்)

74, பெரியகடை — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'பாடசாலைகள் தோறும் நடன ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்'

## திரு. முருகேசம்பிள்ளை விருப்பம்

யாழ்ப்பாணம். திக.

"ஒரு நடன ஆசிரியர், பல பாடசாலைகளில் நடன வகுப்புகளை நடாத்துவதினால், போதிய கவனமெடுத்து நாட்டிய வகுப்புகளை நடாத்த முடிவதில்லை. கல்வி இலாகா இதுவிடயத்தில் கவனமெடுத்து ஒவ்வொரு கலவன் பாடசாலைக்கும், ஒவ்வொரு நடன ஆசிரியரை நியமிக்கவேண்டும்."

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பருத்தித்துறை நாட்டியாலய மாணவிகளின் நாட்டிய விழாவில் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கல்வி இலாகாவுக்கு இவ்வேண்டுகோளை விடுத்தார்.

தொடர்ந்து தமது உரையில் அவர் கூறியதாவது:

"நாட்டியம், உடலுக்கு உறுதியைத் தருகிறது. இது பத்தைந்து வருடகாலமாக தமிழ்க் கலாசாரம் முன்னேற்றமடைந்து வருகிறது. நாட்டியம், தமிழ்க்கலாசார மறுமலர்ச்சிக்கு இன்றியமையாதது. பொதுமக்களின் ஆதரவு இப்படிப்பட்ட நாட்டியங்களுக்கு இருக்கவேண்டும். இனிநெருங்கி போகும் புதிய பட்டணங்களிலும் இப்படிப்பட்ட நாட்டியக் கல்லூரிகளைத் திறந்து அங்குள்ள கிராமிய பிள்ளைகளுக்கும் நாட்டியத்தில் பயிற்சி அளிக்கவேண்டும். இப்படிப்பட்ட நடன கல்லூரிகளை நடாத்துவதென்பது பெரிய தேசத் தொண்டாகும்.

நாட்டிய அமைப்பு செய்த குமாரி லலனி தாமோதரம் பிள்ளையை உதவி அரசாங்க அதிபர் பாராட்டினார்.

## தலா 500 பிணை

உடுவில், சனி சங்கானையிலுள்ள வீடு ஒன்றிலிருந்த 'ட்ரான்சிஸ்டர்' ரேடியோக்கள் களவாடப்பட்டது சம்பந்தமாக பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு இளைஞர்களை மல்லாகம் கோட்டில் சாட்சிகளை அடையாளம் காட்டினர்.

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் இரு எதிரிகளையும் தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

## கிராமவாசிகள் ராணுவத்தினர் மோதல்

கொழும்பு, ஞாயிறு கஞ்சுத்துறையிலுள்ள கடுக்குருண்டை என்னும் கிராமத்தில் கிராமத்தவர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் இரு கிராம வாசிகள் குத்துக்காயங்களுக்குள்ளாகி களுத்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது சம்பந்தமாக இரு இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது திரு. க. முருகேசு, முல்லைத்தீவுப் பட்டினசபை வெளிவாரித்து உத்தியோகத்தர் தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இன்று தொடக்கம் இவரிடம் இப்பட்டினசபைக்குச் சேரவேண்டிய செலுத்த பணத்தைச் செலுத்த வேண்டாமென வரியிறுப்பாளரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அ. சந்தியாபிள்ளை,
தலைவர்,
பட்டினசபை,
முல்லைத்தீவு.

4-10-1968. 1003

## விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

1. வயது 21 — 35.
2. கல்வித் தராதரம்: 8-ம் வகுப்பு.
3. வியாபார அனுபவம்.
4. நற்நடத்தைத் தராதரப்பத்திரம்.

விண்ணப்பிப்பவர் வலி வடக்கு காரியாதிகாரி பிரிவுக்குள் இருக்க வேண்டும். விண்ணப்பப் பத்திரம் 20-10-68க்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.

நிர்வாகக் காரியதரிசி,
வலி வடக்குப் பல. நோ.,
கூ. ச. சமாசம்,
சுன்னாகம்.

சுன்னாகம்,
4-10-68. 1004

## கேள்விப்பத்திரம்

### சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கு

யாழ்ப்பாணக் கச்சேரி சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன; சிற்றுண்டிச்சாலையை எடுத்து நடத்துபவர் மதிய போசனம் வழங்குவதற்கும் சம்மதிக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 29-10-68 நண்பகல் 12 மணிக்கு முன்பதாக அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கவேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சிற்றுண்டிச்சாலை விண்ணப்பம்' எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப்பத்திரங்கள் ரூபா 10/- கட்டுப்பணமாகக் கட்டிக் கச்சேரியில் பெற்றுக் கொள்ளலாம். 753


MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 9-45 p m.
Poya PrePoy 10 30
Sylvia Syns
in
THE WORLD
TEN TIMES OVER
(Strictly for Adults)

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா
9-10-68 வரை
ரசிகப்பெருமக்கள்
தொடர்ந்து
அரைக் கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்.

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ராமராவ்—ஜெயலலிதா
நடித்த
அபூர்வப்பிறவிகள்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
சிவாஜி-ஜெமினி
சாவித்திரி
நடித்த
கந்தன் கருணை

பருத்தித்துறை
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
பாயாதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
நடித்த
படகோட்டி


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

நாவலர்வீதி - கச்சேரிநல்லூர் வீதிச்சந்திக்கு அருகாமையில் குறுசெட் வீதியில் இரண்டுபரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ந. நாகேந்திரம், பிரகாஷ்சலவைத் தொழிற்சாலை, 222, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 146

காணி

சகல வசதிகள் கொண்ட வீட்டுடன் மூன்று பரப்புக் காணி குரும்பசிட்டி அம்மன் கோவிலடியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. நல்லையா, உதயசூரியன் கபே, குரும்பசிட்டி தெல்லிப்பழை. 139

காணி:

வல்வெட்டித்துறைக்கு அண்மையிலுள்ள மயிலியதனையில் ரோட்டுக்கருகில் வீடு கட்டக்கூடிய 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ரோட்டு முகப்புடன் சிறு துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல: 250 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 250

## பெண்கள் மிஞ்சிவிடுகின்றனர்!

அச்சுவேலி, ஞாயிறு "யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்களை பெண்கள் மிஞ்சிவிடுகிறார்கள்" என்று கூறினார் யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா.

அச்சுவேலி சென்றிரேசா பாடசாலை விளையாட்டு போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

விளையாட்டுத் துறையில் இப்படி பெண்கள் ஆண்களை மிஞ்சிவிடுவது அவர்களின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று அவர் சொன்னார்.


தீபாவளி விற்பனை!

தீபாவளித் திருநாளை சிறப்புடன் கொண்டாட
உங்களுக்கு தேவையான
எல்லா வகையான
றெடிமேற் உடுப்புகளும்
உயர்ந்த ரக
நைலோன் — டெர்லின் — நொண்ணயன்
சேட் வகைகளும்
மற்றும்
புடவைத் தினுசுகளும் ஏராளமாக
வரவழைத்திருக்கிறோம்
நிதான விலைகளில் பெற்றுக்கொள்ள
விஜயஞ்செய்யுங்கள்!
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208 கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்

சிங்கம் மார்க்
சந்தனாதித்
தைலம்
ஈழவளநாட்டிலே எங்குமே கிடைக்கும்

மகத்தான 4வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
மற்றும் பலர்
நடித்த
நான் ஆணையிட்டால்

79வது தினம்
கிங்ஸ்லி
(கொழும்பு)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
நான்

11-ந் திகதி முதல்
கிங்ஸ்லி, பிளாஸா திரைகளில்
எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
நடித்த
மறக்கும் பாவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நாள் கடும் மழையைத்தொடர்ந்து மேற்கு வங்காளத்தில் நிலச்சரிவுகள்

## 150 க்கும் அதிகமானோர் மரணம்

கல்கத்தா, ஒக். 6

**மேற்கு வங்காளத்தில் கடந்த நான்கு நாட்களாகப்பெய்த பெருமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவுகளில், 150க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக டார்ஜீலிங்கிலிருந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

டார்ஜீலிங், கலிம்போங், கேபிசுகி பகுதிகளுக்கிடையேயான சாலை, ரயில் போக்குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டுள்ளன.

இறந்த 150 பேரில், 100 பேர் டார்ஜீலிங்-கலிம்போங் பகுதியில் மட்டும் மரணமாகியுள்ளனர். டார்ஜீலிங்கில் 120 வீடுகள் அழிந்தன. 6 வீடுகள் விழுந்தன.

டார்ஜீலிங்கிலிருந்து சிறிது தொலைவில் ஓரிடத்தில், 6 வீடுகள் இடிந்துவிழுந்தன. அவற்றிலிருந்த 50 பேரின் கதி என்னவாயிற்று என்பது பற்றி இன்னும் தெரியவில்லை.

### 300 கிராமங்கள் பாதிப்பு

பீஹாரில், கவுஹாத்தி ஆறு வெள்ளப் பெருக்கெடுத்துள்ளதன் விளைவாக, சுமார் 300 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அஸ்ஸாம் ராஜ்யத்துக்கும் நாட்டின் இதர பகுதிகளுக்குமிடையேயான போக்குவரத்து, தந்தி, தொலைபேசித் தொடர்புகள் தடைபட்டுள்ளனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உத்தேசநான்கு வல்லரசு உச்சி மாநாடு

### வெளியுறவு மந்திரிகள் பேச்சு ஆரம்பித்துள்ளதாக யூதாண்ட்

நியூயோர்க், ஒக். 6

அமெரிக்கா, பிரிட்டன் ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளினதும் ஓர் உச்சி மாநாடு நடத்தப்படவேண்டியது அவசியமென்ற தமது ஆலோசனையைத் தொடர்ந்து இதுசம்பந்தமாக அந்த நான்கு வல்லரசுகளின் வெளியுறவு மந்திரிகளும் பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் அறிவித்துள்ளார்.

ஆனால் உத்தேச நான்கு வல்லரசுகள் மாநாடு பற்றிய வேறு விபரங்கள் எவற்றையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

### மேற்கு ஆசியாவும் டாக்டர் ஜாரிங்கும்

மேற்கு ஆசியாப் பகுதியில் ஐ. நா. விசேஷ தூதுவராகக் கடமையாற்றும் டாக்டர் குணர் ஜாரிங்கின் பணி அங்கு தொடர்ந்து நடைபெறவேண்டுமென்பதையே தாம் விரும்புவதாக யூதாண்ட் தெரிவித்தார்.

யூதாண்டுடன் மேற்கு ஆசியா பற்றிச் சுமார் ஒன்றரைமணி நேரம் பேசிய இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. அபா எபான் டாக்டர் ஜாரிங்கின் சமாதானப்பணி மேற்கு ஆசியாவில் தொடரவேண்டுமென்பதே தமது நாட்டின் விருப்பமுமாகும் என்று கூறியுள்ளார்.

டாக்டர் ஜாரிங் மேற்கு ஆசியாவிலிருந்து விலகினால் அங்கு நிரப்பமுடியாத அரசியல் சமாதான வெறுமை தோன்றி விடுமென்றும் பிரச்சினைகளை இராணுவஅடிப்படையில் தீர்க்க முயற்சிகள் எடுக்கப் படலாமென்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் மேற்கு ஆசியாவில் யூதாண்டின் விசேஷ பிரதிநிதியாகக்கடமையாற்றி வரும் டாக்டர் குணர் ஜாரிங் ரஷ்யாவில் சுவீடிஷ் தூதுவராவார். ஐ. நா. மேற்பார்வையாளராக மேற்கு ஆசியாவில் பணிபுரியும் பொருட்டு அவரது தூதுவர் பதவியிலிருந்து சுவீடிஷ் அரசாங்கம் அளித்துள்ள விடுமுறைக்காலம் இம்மாதத்துடன் முடிவடைய இருக்கிறது.

#### இரண்டரை வயது

## குழந்தைக்கு ஈரல் பொருத்தம்

வாஷிங்டன், ஒக். 6

அமெரிக்காவில், பொஸ்டன் என்னுமிடத்தில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியொன்றில் இரண்டரை வயதுப் பெண் குழந்தைக்குப் பிறந்து ஒரு நாளான குழந்தையின் ஈரல் பொருத்தப்பட்டது. ஈரலைப் பொருத்துவதற்கான சத்திரசிகிச்சை 5 மணி நேரம் நீடித்தது.

ஈரல் பொருத்தப்பட்ட குழந்தைக்குக் குணப்படுத்த முடியாத ஒரு ஈரல்நோய் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

## பெருவில் இப்போது அமைதி

லீமா, ஒக். 6

பெரு நாட்டுக்கான விஜயத்தை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ரத்துச்செய்திருப்பது பெரு மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாக லீமாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெருவில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி காரணமாக இந்தியப் பிரதமர் அந்நாட்டுக்குத் தாம் செய்யவிருந்த விஜயத்தை ரத்துச்செய்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து இப்போது இங்கு அமைதி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய துருப்புகளும், பொலிஸ் படையினரும் தெருக்களில் காவல் புரிந்துவருகின்றனர்.

புதிய ஆட்சியாளரால் கைது செய்யப்பட்டு, இரண்டு நாட்களாகக் காவலில் வைக்கப்பட்ட ஐந்து மந்திரிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## மெக்ஸிக்கோ மாணவர்களின் சமாதானப் பிரகடனம்

மெக்ஸிக்கோ, ஒக். 6

அண்மையில் மெக்ஸிக்கோவில் மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் இறந்தவர் தொகை 45 என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் மெக்ஸிக்கோ தேசிய மாணவர் சங்கம் தனதறிக்கையொன்றில் கைகலப்புகளில் இறந்தவர்கள் 300 பேர் எனத் தெரிவித்துள்ளது. சில மாணவர்களைத் துருப்புக்கள் பிடித்துக் கொலை செய்ததாகவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் தேசிய மாணவர் சங்கம் சமாதானப்பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டது. இனிமேல் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் பக்கலைக்கழக அல்லது பள்ளிக்கூட எல்லைக்குள்ளேயே நடத்தப்படுமென்றும் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குள எவ்வித இடையூறையும் விளைவிக்க விரும்பவில்லையென்றும் அப்பிரகடனத்தில் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சனசமூகநிலையங்களை 'பூட்டிவைக்கப்படாது'

உடுப்பிட்டி, ஞாயிறு

'சனசமூக நிலையங்களைப் பூட்டிவைப்பதால் பயனில்லை. அவை பொதுமக்களின் தேவைகளை எந்நேரத்திலும் பூர்த்திசெய்யத் தயாராக இருக்கவேண்டும்' என்று கரணவாய் வடக்கு தவிண்டில் கிராமமுன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தை மீண்டும் புனரமைப்புச் செய்து திறந்துவைத்துப் பேசுகையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சுப்பிரமணியம் கூறினார்.

உடுப்பிட்டித் தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் பேசும் பொழுது நாட்டில் சீதன வழக்கம் ஒழியவேண்டுமென்றும் இதற்குப் படித்த வாலிபர்கள் முன்மாதிரியாக விளங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மற்றும் விரிவுரையாளர்கள் ஜே. ஜெயக்குமார் சி. தில்லைநடேசன், எஸ். ஆறுமுகம்ஆகியோரும் பேசினர். திரு மா. நித்தியானந்தசிவம் தலைமை வகித்தார்.

## வரியைக் குறைக்க சம்மதம்

உடுவில், வெள்ளி

தற்பொழுது அறவிடப்பட்டுவரும் 9 வீத வரியை 6 வீதமாகக் குறைக்க வேண்டும் என மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கத்தின் கோரிக்கையை மானிப்பாய் பட்டின சபை ஏற்றுள்ளது.

1969-ம் ஆண்டிலிருந்து வரியை 6 சவீதமாகக் குறைப்பது என மானிப்பாய் பட்டினசபைமுடிவு செய்துள்ளது.

மானிப்பாய் பட்டின சபைத் தலைவர் திரு. இராசேந்திரந்தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக்கூட்டத்தின்போது இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## இரு பெண்களை வெட்டியதாக வழக்கு

சாவகச்சேரி, ஞாயிறு

இவ்வருடம் ஏப்ரல் 3-ம் திகதி கிளிநொச்சி ராமநாதபுரம் என்ற இடத்திலிருக்கும் சுந்தரமூர்த்தி என்பவர் அதே ஊர் காசிகைா வெள்ளைமுத்து பார்வதி ஆகிய இருபெண்களையும் கத்தியால் வெட்டிப் படுகாயப் படுத்தியதாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. வின்னராசா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் விசாரணையை ஒத்தி வைத்தார்.

வழக்காளி தரப்பில்புறக்டர் திரு ஏ. அன்ரனி கிளிநொச்சிப் பொலிசாரின் உதவியுடன் ஆஜரானார்.

## துலா சரிபார்க்கையில் விழுந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

துலாக்கொடியைச் சரிபார்க்க துலாமீது ஏறிய போது நிலத்தில் விழுந்து பெரும் காயங்களுக்குள்ளானதாகக் கூறப்படும் மயிலைச் சேர்ந்த பி. செல்லன் [58 வயது] யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானார். இவரின் மரணம் சம்பந்தமாக பளைப் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

### கூப்பன்கள் கொடுபட்டன

யாழ்ப்பாணம், திங்.

அரசாங்க விவசாயக்கடன் செல்ல காலபோகத்தில் பெற்றவர்கள், சங்கங்களுக்குத் தமது கடனைத் திருப்பிக் கொடுக்காததால் கூப்பன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து பல கடனாளிகள் அவசர அவசரமாக கடன்களைத் திருப்பிக்கட்டி தமது கூப்பன்களைத்திருப்பிப்பெற்றுள்ளனர். [ந. நி.]

# இம்மாத முடிவுக்குள் வார்ஸோ துருப்புகள் செக். நாட்டை விட்டு வெளியேறும்

## செக்: பாதுகாப்பு மந்திரி அறிவிப்பு

பிராக், ஒக். 6

**செக்கோஸ்லாவாக்கிய பாதுகாப்பு மந்திரி திரு. மார்டின் டூ, நாட்டிலுள்ள அந்நிய துருப்புகளில் அநேகம் இம்மாதம் முடிவுக்குள் நாட்டை விட்டு வெளியேறி விடுமென அறிவித்துள்ளார்.**

நேற்று நாட்டு மக்களுக்கு ஒலிபரப்பிய ரேடியோ உரையில் அவர் இவ்வாறு கூறினார்.

தாம், ரஷ்ய பாதுகாப்பு மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின் பேரிலேயே இவ்விதம் வார்ஸோத்துருப்புகள் இம்மாதம் முடிவுக்குள் வெளியேற விருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆனால், சோவியத் பாதுகாப்பு மந்திரியுடனான தமது பேச்சுவார்த்தைகள் பற்றி மேலும் விபரங்கள் அறிவிக்க அவர் மறுத்து விட்டார்.

### சில துருப்புகள் இருக்கும்

சில துருப்புகள், இந்த மாரிகாலத்தில் செக்கோஸ்லாவாக்கியாவில் தொடர்ந்து இருக்குமென்றும் அவை மேலும் எவ்வளவு காலத்துக்கு நாட்டில் இருக்கும் என்பது பற்றி ரஷ்யத் தலைவர்களுடன் பின்னர் நடத்தும் பேச்சுக்களிலிருந்தே தெரியவரும் என்றும் அவர் கூறினார்.

துருப்புகள் நாட்டை விட்டு வெளியேறுவது என்பது ஒரு பக்கச்சார்பான நடவடிக்கை ஆக மாட்டாது. மாஸ்கோ ஒப்பந்தத்தின் கீழ் செக்கோஸ்லாவாக்கியா அளித்துள்ள உறுதிமொழிகளும் காப்பாற்றப்பட வேண்டும் இவ்வாறு செக். பாதுகாப்பு மந்திரி மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சத்தியம் என்பது பொதுவானது. அது ஒரு சமைத்தினருக்கோ, அல்லது ஒரு இனத்தவருக்கோ சொந்தமானதல்ல.
—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலக வருஷம் புரட்டாதிமாதம் 21-ந்திகதி
[7-10-68]

## பிரதமரின் நம்பிக்கை

மாவலி கங்கையைத் திருப்பும் திட்டம் பூர்த்தியானதும் இலங்கையின் அரிசி உற்பத்தி நாட்டின் தேவைக்கும் அதிகமாக இருக்குமென்றும் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்காக புதிய சந்தைகளைத் தேடவேண்டிய அவசியம் ஏற்படுமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் தெரிவித்த நம்பிக்கை வீண் போகக் கூடாதென்று நாமும் விரும்புகிறோம்.

பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்து அதை இலவசமாக வழங்க அரசாங்கம் முன்வந்தது. நிலையிலும் நன்மை என்று கருதினோம் இத்தக் கருத்து, தவறல்ல என்பதை அரசாங்கமும் பிரதமரும் தெரிவிக்கும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. ...

... அன்றைந்து வார்த்து நிற்கும் வடபகுதி மக்களுக்கும் உபயோகப்படுவதற்கு வந்து சேர்ந்தால் அரிசி மட்டுமல்ல உப உணவுப் பொருள்களும் கூட இறக்குமதி செய்வதற்குப் பதிலாக ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதேசமயம் மொழி, இன, மதப்பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தாமல், அடுத்த தேர்தலில் வாக்குகள் கிடைக்காது என எதிர்பார்த்தாலும் கூட கடற்றொழில் கைத்தொழில் ஆகியவைகளிலும் பிரதமர் அதிக அக்கறை செலுத்தினால் நிச்சயம் இலங்கையின் எதிர்காலம் செழிப்பாக இருக்கும். ...

### அருமையான யோசனை

...

## விவசாயக்கடன் நிபந்தனைகள்

...

## 'ஆசிரியர் தொழில் புனிதமானது'

...

## 'மகாத்மாவின் உபதேசத்தை மாணவர்கடைப்பிடிக்கவேண்டும்'

எட்டியாந்தோட்டை, ஞாயிறு

'மகாத்மா காந்திஜியின் உபதேசங்களின்படி மாணவர்கள் ஒழுகவேண்டும். அப்படி ஒழுகினால் அவர்களின் எதிர்காலம் நல்லபடியாக அமையும்.'

இவ்வாறு எட்டியாந்தோட்டை புனிதமேரி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற மகாத்மா காந்திஜி நூற்றாண்டுவிழாவில் மகாத்மா காந்தியின் உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்துப்பேசிய இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் ... தலைவர் திரு. வி. பி. கணேசன் எடுத்துக்கூறினார். வித்தியாலய அதிபர் திரு. சி. செல்வநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

... சேகரையில் மகாத்மா காந்தியின் உண்மைக்கொள்கைகளைக் கடைப்பிடித்து உலகில் வாழ்ந்தவர் அன்னையில் மறைந்த மார்டின் லூதர்கிங் என்றும் அவர் மகாத்மாவின் அஹிம்சை நெறியைப் பேணிப்போற்றி வந்தவரென்றும் கூறினார். மகாத்மா உலகிலுள்ள சமயங்களின் உண்மைத் தத்துவங்களையெல்லாம் உணர்ந்து அதன்படி வாழ்ந்துகாட்டியவரென்றும் இதனைப் பின்பற்றி வாழ்ந்தால் சகல சமயத்தவரும் நல் வாழ்வுவாழலாமெனவும் குறிப்பிட்டார்.

திருப் பூங்குடி திரு. வி. க. ஆறுமுகத்தின் 'காந்திமகான் கதை' வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

வித்தியாலய ஆசிரியர் திரு. என். சோமசுந்தரம் நன்றி கூறினார்.

## காந்தி நூற்றாண்டு கொண்டாட் முடிவு

அராலி, ஞாயிறு

...

## இன்றைய பலன்

7-10-68
புரட்டாதி 21 உ
திங்கட்கிழமை

திதி- பிரதமை மாலை 6-21 மேல் துதிகை.

நட்சத்திரம்- ரேவதி பகல் 1-23 மேல் அச்சுவினி.

ராகு காலம்- 7-32—9-02.

சுபநேரம்- 12-02—1-32.

இன்று பிறந்தவர்களுக்கு— உடல் நலம் பாதிக்கப்படலாம். சிறு நோய்களிலும் சிறந்த வைத்திய முறைகைக் கையாளவும். வீட்டில் அமைதி குன்றும், எச் சட்டத்திலும் ஆத்திர உணர்ச்சிக்கு இடம் கொடுக்காது நடந்து கொள்ளவும். பொறுமையுடன் இருப்பின் ஆண்டின் நடுப்பகுதியில் நன்மாற்றங்களை உருவாக்கும் பெரியவர்களுடன் அபிப்பிராயபேதங்களை தவிர்த்துக்கொள்ளவும். இயந்திரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மிகவும் பாதுகாப்பாக நடந்து கொள்ளவும். பொருள் நிலை ஸ்திரமாகவே இருக்கும்.

மேஷம்- குடும்பக் கவலை குறைய வழி பிறக்கும்.
ரிஷபம்- பேச்சுவன்மை பெரும்புகழ் உண்டு.
மிதுனம்- சூழ்ச்சி மிகுதி சோதனைக் கட்டம்.
கடகம்- அறிவுக்கு விருந்து, ஆராய்ச்சியில் ஆர்வம்.
சிம்மம்- இன்பம் பொங்கும், இனசன மகிழ்ச்சி.
கன்னி- துன்பத்தின் நிழலாட்டம், துயர் படிந்த நாள்.
துலாம்- இல்லறம் இனிக்கும், இணைப்பு இறுகும்.
விருச்சிகம்- மோசடி நடக்கும், விழிப்புடன் இரு.
தனுசு- தந்தை வழி ஆதரவு, நாமமான வாழ்வு.
மகரம்- இடமாற்றமுண்டு இனிமையாக நடக்கும்.
கும்பம்- கவலைக்கும் பணம், களர்ச்சி மிகுதி.
மீனம்- பொருள் நஷ்டம், சோர்வு மிகுதி.

சோதிடகலாநிதி ... வைப்பிள்ளை

## ஆசிரியருக்கு பிரியாவிடை

உடுவில், ஞாயிறு

...

## 'சக்தியின் இயக்கமே இந்த உலகம்'

### திலகமகராஜ் சுவாமிகள் உரை

உடுவில், ஞாயிறு

...

### நித்திரைக் குளிகைகளுக்கு 2 வயது குழந்தை பலி

கொழும்பு, ஞாயிறு

...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எமக்கும் சுதந்திரம் பெற்றுத்தந்தார்'

## காந்தி விழாவில் பேச்சு

அளவெட்டி, ஞாயிறு "தனக்காக வாழாது பிறர்க்காக வாழவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்த காந்திமகான் பாரத நாட்டிற்கு மாத்திரம் சுதந்திரம் பெற்றுக் கொடுக்காமல் எமது நாட்டிற்கும் சுதந்திரம் பெற்றுத்தந்தார்."

இவ்வாறு காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டி விமலாம ஆங்கில மகாவித்தியாலயக் கழகத்தினர் நடாத்திய சொற்பொழிவு நிகழ்ச்சியில் ஒரு அப்பாத்துரை கூறினர்.

வித்தியாலய மண்டபத்தில் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இச்சொற்பொழிவு நிகழ்ச்சியில் அப்பாத்துரை மேலும் பேசுகையில்-

இற்றைக்கு 300 ஆண்டுக்கு முன்மக்கள் காட்டுமிராண்டிகளாகவாழ்ந்தனர் இருள் படிந்த ஆசிய நாட்டை ஒளி பெறச் செய்யவே காந்தி தோன்றினார் தனக்காக வாழாது பிறருக்காகவும் வாழ்ந்து மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை ஏற்படுத்தினர்.

பண்டிதர் இ. நமசிவாயம் தமது தலைமையுரையில் காந்தி எமது நாட்டுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். என்றார்.

செல்வன் நடராசா நன்றி புகன்றார்.

---

## காந்திஜி விழா

உடுவில், ஞாயிறு "காந்திஜிக்கு விழா எடுக்கும் வேளையில் அவரின் போதனைகளுக்குச் செவிசாய்த்து அதன்படி நடக்க முன்வரவேண்டும்" என இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற காந்திஜி விழாவில் 'காந்திஜியின் அஹிம்சை' பற்றி உரைநிகழ்த்திய பண்டிதர் இராசையா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வை. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் உட்பட வேறு பலரும் உரைநிகழ்த்தினர்.

---

## பாலைக் கொடுக்க முடியவில்லையாம்

சுழிபுரம், ஞாயிறு பசுமாடுகளை வைத்துப் பராமரிக்கும் ஏழை விவசாயிகள் தங்கள் பாலைக் கொடுக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். கடந்த பத்து வருடங்களுக்கு மேல் வளர்க்கப்பட்ட பால் சங்கம் இன்று எடுப்பார் கைப்பிள்ளைபோல தத்தளித்துக்கொண்டு இருப்பதாகவும் இச் சங்க விடயத்தில் நடவடிக்கை எடுத்து உதவுமாறு மேற்படி சங்கச் செயலாளர் திரு த. மயில்வாகனம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணி அபயசேகராவுக்கு அனுப்பியுள்ள ஓர் மகஜர்மூலம் வேண்டியுள்ளார். தக்கசந்தை இருந்தும் நல்ல உதவி இல்லாத காரணத்தினால் தொழில்பாதித்துள்ளதுடன் அனேகம் கால்நடைச் சொந்தக்காரர் அதிக நஷ்டம் அடைய வேண்டியும் உள்ளது என்றும் காலதாமதம் செய்யாது உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## கூட்டுறவு மகாநாடு

யாழ்ப்பாணம், திங். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் 31-வது கூட்டுறவு மகாநாடு இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இத்தினக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. யுவராஜ் உதயபாலசிங்கி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாரெனத் தெரிகின்றது. [ந. நி.]

---

## தேவாரப் போட்டியில் வெற்றி பெற்றனர்

சுழிபுரம், ஞாயிறு மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தினர் நடாத்திய தேவார மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலியார் செ. சின்னத்தம்பி பரிசில்களை வழங்கிப் பாராட்டினர். போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விபரம்:

### கீழ்ப்பிரிவு

மு. சிவராணி, த. தங்கேஸ்வா, க. கருணாகரன், ஆ. இராசலக்ஷ்மி, நா. செல்வரத்தினம்.

### மேற்பிரிவு

ஆ. புனிதவதி, ஆ. அன்னலட்சுமி, பொ. விஜயரத்தினம், ந. மகாதேவன், வை. சிவநாதம்.

---

## விவசாய கடன்

வல்வெட்டித்துறை, ஞாயிறு சரவணை — வேலணை மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விவசாயக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களின் விவசாயக் கடன் மனுக்கள் உணவு உற்பத்தி மேற்பார்வையாளரினால் பரிசிலனை செய்யப்பட்டுச் சங்க நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 பேர் விவசாயக் கடனுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

---

# நெற்காணிச்சட்டமும் யாழ்ப்பாணக் கமக்காரரும்

இலங்கையில் சமீப காலங்களில் இயற்றப்பட்ட முற்போக்கான சட்டங்களில் ஒன்று நெற்காணிச் சட்டமாகும். பண்டாரநாயக்காவின் எம். ஈ. பீ. அரசாங்கத்தில் விவசாய அமைச்சராயிருந்தவரும் மார்க்ஸிஸத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவருமான திரு. டொன் பிலிப் குணவர்த்தன இச்சட்டத்தை இயற்றி அமுல் நடத்தினர்.

இச்சட்ட முதலில் மாத்தறை, குருநாகல் முதலிய மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டு பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கையின் பிற பகுதிகளிலும் புகுத்தப்பட்டது. கடந்த இரண்டொரு வருடங்களாக இது யாழ்ப்பாணத்திலும் செயல்படுகிறது.

நெற்காணிச் சட்டத்தின் பிரதான நோக்கம் குத்தகைக்கு காணி செய்யும் விவசாயிகளுக்கு கூடுதலான பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கும் தாங்கள் செய்யும் காணிகளில் உரிமை உண்டு என்ற எண்ணத்தை உண்டுபண்ணி அதனால் நெல் உற்பத்தியை பெருக்குவதாகும். இன்னொருவருக்கு சொந்தமான காணிக்காக நாம் ஏன்பாடுபட வேண்டுமென்ற எண்ணத்தை அவர்களுடைய மனதிலிருந்து அகற்றிவிட்டால் விவசாயிகள் கூடுதலான ஊக்கம் செலுத்துவார்கள். பல காணிச் சொந்தக்காரர் காணிகளை விவசாயிகளுக்கு குத்தகைக்கு கொடுத்துவிட்டு தாங்கள் மாடமாளிகையில் இருந்தவாறே ஏழை விவசாயிகளின் உழைப்பை அனுபவித்து சுகபோக சீவியம் நடாத்துகிறார்கள். குத்தகை நிபந்தனைகளில் சில முற்போக்கான சீர்திருத்தங்களை செய்துவிட்டால் சொந்தக்காரன், விவசாயி இருவருமே காணியை அபிவிருத்தி செய்து அதிலிருந்து பூரணமான பலனைப் பெற்று நாட்டை வளம் படுத்துவார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நிலச் சுவாந்தார்களும் ஜமீன்தார்களும் ஐம்பது, நூறு, ஐந்நூறு என்று ஏக்கர் கணக்கில் நெற்காணிகளை வைத்திருக்கிறார்கள். இவர்களில் பலருக்கு தங்கள் நிலங்கள் எவ்விடத்தில் இருக்கின்றன என்பதே தெரியாது! நெற்காணிச்சட்டம் முக்கியமாக இவர்களைத் தான் இலக்காகக் கொண்டது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறல்ல. இங்குள்ள காணிச் சொந்தக்காரர் பரப்புக் கணக்கில்தான் தான் காணி வைத்திருக்கிறார்கள். ஆக மிஞ்சிய பெரிய முதலாளி ஓர் இரண்டு மூன்று ஏக்கருக்கு சொந்தக்காரராயிருப்பார். அவ்வளவுதான். நெற்காணிச்சட்டத்திலுள்ள இவ்விதிகளை இங்கேயும் அமுல் நடத்துவது சரியா என்று சிலர் கேட்கிறார்கள்.

சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு குறிச்சிக்கும் பயிர்ச்செய்கைக் குழு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இக்குழுக்களுக்கு ஏராளமான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. காணிச் சொந்தக்காரரிடமிருந்து இக்குழுவினர் (காணி செய்யப்பட்டாலென்ன செய்யப்படாவிட்டாலென்ன) பரப்புக்கு இவ்வளவு தொகை வரி செலுத்த வேண்டுமென்று கூறி வசூலித்தும் வருகிறார்கள். இது சட்டபூர்வமானதாயிருந்த போதிலும் இதற்கும் சில இடங்களில் ஆட்சேபம் தெரிவிக்கப்படுகிறது. காணிக்காரருக்கு விதைநெல், உரம் முதலியன சகாய விலையில் கொடுக்கப்படுவதால் தான் இந்த வரி வசூலிக்கப்படுகிறதாம். ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாக் காணிக்காரரும் இந்த சலுகைகளை பயன்படுத்துகிறார்களோ என்றும் சொல்ல முடியாது. சிலர் தங்கள் சொந்த விதை நெல்லையும் இயற்கை பசளைகளையும் பாவிக்கிறார்கள். இவர்களுக்கு பயிர்ச்செய்கைக் குழுவின் உதவியோ ஆதரவோ தேவைப்படாது. இவர்களும் வரி கொடுக்க வேண்டுமா?

இன்னுமொரு விஷயம். யாழ்ப்பாணத்தில் கிராமத்துக்குக்கிராமம் குறிச்சிக்கு குறிச்சி பல கோயில்களைக் காணலாம். இக்கோயில்களை ஸ்தாபித்தவர்கள் அவற்றின் பராமரிப்புக்கென்று பல காணிகளை தர்மசாதனங்களாக எழுதி வைத்துள்ளார்கள். இக்காணிகளை மேற்பார்வை செய்யும் தர்மகர்த்தாக்களோ, முகாமையாளர்களோ அவற்றை குத்தகைக்கு கொடுத்து அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தை கோயில்களுக்கு பிரயோசனப்படுத்துகிறார்கள். நெற்காணிச்சட்டம் இவர்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கென்று பிரத்தியேகமாக தேசவழமை,—மரபு முதலிய சட்டங்கள் இருக்கின்றன. அதுபோல இந்த நெற்காணி சட்ட விஷயத்திலும் யாழ்ப்பாணத்தில் நிலவும் விசேஷ தன்மைகளுக்கேற்ப அதில் சிலபல சீர்திருத்தங்களும் மாறுதல்களும் ஏற்படுத்தினால் நல்லதென்று பலர் கருதுகிறார்கள்.

— வழிப்போக்கன்

---

## நாட்டிலும் நகரிலும்

---

# 'கண்ணகாதேவி'யுடன்போன மீனவரைக்காணவில்லையாம்

## ஆழ்கடலில் தேடுகிறார்கள்

அளவெட்டி, ஞாயிறு ஆழ்கடலில் சுழலுக்கு இலக்கான வள்ளமும், அதில் சென்ற மீனவரும் இருதினங்களாகக்கரைசேரவில்லையாம். அவர்களை தேடிச்சென்ற வள்ளங்களையும் காணவில்லையாம். மீண்டும் பல வள்ளங்கள் தேடுதலில் ஈடுபட்டுள்ளன.

"கண்ணகாதேவி" எனப் பெயரிடப்பட்ட வள்ளமொன்றில் மயிலிட்டியைச் சேர்ந்த மு. கணேசமூர்த்தி, வ. கனகரத்தினம், உடுத்துறையைச் சேர்ந்த முருகுப்பிள்ளை ஆகிய மூவரும் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றசமயம் எதிர்பாராது ஏற்பட்ட சுழல்காற்றுல் வள்ளம் திசைதிரும்பிவிட்டதாம்.

இவ்வள்ளத்துடன் மீன் பிடிக்கச் சென்ற மற்றும் வள்ளங்களும் சுழல்காற்று காரணமாக கஷ்டப்பட்டு கரைசேர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

---


## பாடசாலை மாணவருக்கான

# கட்டுரைப் போட்டி

ஈழநாடு 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஈழநாடு ஸ்தாபனம் நடாத்தும் மாபெரும் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்ற மாணவ மாணவியர் இப்பொழுதே தயாராகுங்கள்.

போட்டிகள் அகில இலங்கை அடிப்படையில் நடாத்தப்பெறும். மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என போட்டிகள் இரு பிரிவாக அமையும் மேற்பிரிவுக்கான போட்டிக் கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கீழ்ப்பிரிவுக்கான கட்டுரைகள் 700 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## கட்டுரைக்கான தலைப்புகள்

மேற்பிரிவு: காந்தியும் பத்திரிகையும்

கீழ்ப்பிரிவு: காலத்தின் கண்ணாடி

ஈழநாடு பத்திரிகையில் இதற்கெனக் கொடுக்கப்படும் கூப்பனுடன் கட்டுரைகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாணவர் பயிலும் பாடசாலை அல்லது கல்லூரி அதிபரால் கட்டுரை அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

கட்டுரைப் போட்டி முடிவு திகதி 15—11—68

ஈழநாடு 10வது ஆண்டு விழாப் போட்டி

பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

போட்டியின் பெயர்: ____________________

பிரிவு: ____________________

வயது: ____________________

திகதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 92 நெசவாளருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்

## வலி. மேற்கு ப. நோ. சங்கம் ஏற்பாடு

வட்டுக்கோட்டை, ஞாயிறு வலி-மேற்கு ப. நோ. கூ. சங்கம் வெகுவிரைவில் பட்டு நூல் நெசவை ஆரம்பிக்கும். இக் கைத்தொழி லுக்குத் திட்டமிட்டு ஒதுக்கப் பட்ட மூலதனம் ஆறரை லட்சம் ரூபாவும் இத்தொகையில் மூன்றரை இலட்ச ரூபாவிற்கு சற்று உயர்வாக விலை தறி இயந்திரங்களும் உபகரணங்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யச் செலவிடப்படும். ஒன்றரை இலட்சம் ரூபாவின் தறிகளை முதல் மூன்று மாதங்களுக்கு இயக்குவதற்கு செலவிடப் படும். நிலம் கொள்வனவு செய்யவும் கட்டடம் அமைக்கவும் 75, 000 ரூபா செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தொழிலை ஆரம்பத்தில் 92 நெசவாளருக்கு வேலைவாய்ப்பும் 8பேருக்கு நிர்வாகத்தில் வேலை வாய்ப்பும் அளிக்கும். இதன் உற்பத்தி ஒருவருடத்திற்கு ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் சதுர யாராகும் எனத் தெரியவருகிறது.

# வாழ்வை முடித்துக் கொண்டார் வாலிபர்

உடுவில், ஞாயிறு வேலையில்லாமையாலும், குடிகாரத் தந்தையின் தொல்லை சகிக்கமுடியாமையாலும் வாழ்க்கையில் விரக்தி யடைந்த வாலிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாபகரமான சம்பவம் மானிப்பாயில் நேற்று நடைபெற்றது.

மானிப்பாயில் உள்ள உயரப்புலம் என்ற இடத்தில் வசிக்கும் துரைராசா அரசநாயகம் ஜோன் [வயது 21] என்னும் இளைஞரே தற்கொலைசெய்துகொண்ட நபராகும். வாழ்க்கையில் வெறுப்படைந்ததனால் இவ்வாலிபர் வீட்டிலுள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டு தற்கொலைபுரிந்துகொண்டார்.

இறந்தவாலிபர், பொலிஸ் அதிகாரி, மரணவிசாரணை அதிகாரி, பெற்றோர் மற்றும் இனத்தவர்கள் அனைவருக்கும் தனித்தனியான கடிதங்களை எழுதி வைத்துவிட்டு தற்கொலை புரிந்து கொண்டார்.

அவர் தமது கடிதங்களில் குறிப்பிட்டிருப்பதாவது:

"வாழவேண்டும் என்ற ஆசையில் படித்தேன். படித்த எனக்கு வேலையில்லை. நானே நடித்த நாடகத்தில் நான் தோல்வி கண்டேன். தந்தையாரோ தினமும் குடித்துவிட்டுவந்து தொல்லை கொடுப்பார். இவற்றை யெல்லாம் பார்த்து மனம் சகிக்க முடியாத நான் வாழ ?வாழ்வில் முடியாத நான் வாழ்ந்தென்ன இறந்தென்ன என்ற முடிவுக்கு வந்தேன். அதன்படி தற்கொலைசெய்து கொள்ளுகின்றேன். எனது சாவிற்கு எவரும் காரணமல்ல".

இறந்தவரின் பெற்றோரும் சாட்சியமளித்தனர்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா மரணவிசாரணை நடத்தினார். யாழ்ப்பாண மாவட்ட வைத்திய அதிகாரியினால் பிரேதபரிசோதனை செய்யப்பட்டது.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

### சத்திர சிகிச்சை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற புதன் கிழமை பொருத்தியிருந்தார். கடந்த இரு தினங்களாக டிக்கிரி மெனிக்காவின் தேக நிலை அபிவிருத்தியடைந்து வந்தபொழுது டாக்டர்கள் இலங்கையின் முதலாவது சத்திரசிகிச்சை வெற்றியளிக்குமென நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

இரண்டாவது சத்திர சிகிச்சை பெற்ற நோயாளியும் இரு தினங்களுக்குமுன் சுயமானது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். மூன்றாவது சத்திரசிகிச்சை பெற்ற ஹாமிதுராகலையைச் சேர்ந்த டேவிட் சிங்கோவின் தேகநிலை அபிவிருத்தி அடைந்து வருவதாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இருந்து வெளியான அறிக்கைகள் தெரிவித்தன.

---

### கலை அமுதம்

திருகோணமலை, ஞாயிறு திருக்கோணமலை கலைவாணி நாடகமன்றத்தின் பத்தாண்டு நிறைவு விழா அண்மையில் திருக்கோணமலை மக்கெய்ஸர் சுற்றுமதி லரங்கில் நடைபெற்றது. "கலை அமுதம்" என்னும் இக்கலைநிகழ்ச்சி குறித்துக் "கலை அமுதம்" என்னும் மலரும் தயாரித்து இலவசமாக அளித்தனர்.

---

### 30 மாதம் சிறை

உடுவில், ஞாயிறு முப்பது மாதம் ஜீவனாம்சப்பணம் கட்டத் தவறியவர் முப்பது மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. கே. சுப்பிரமணியம் என்பவர் தமது மனைவிக்கும், மக்களுக்குமாக கட்டவேண்டிய ஜீவனாம்சப் பணத்தை 30 மாதங்களாகக் கட்டத்தவறிய குற்றத்திற்காகமுப்பதுமாத சிறைத் தண்டனையைப்பெற்றார்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இவரது குற்றச்சாட்டை விசாரணைசெய்த நீதவான் திரு. எம். ஜமீல் விசாரணை முடிவில் எதிரிக்கு மேற்கண்ட தண்டனையை அளித்தார்.

---

### சிரார்த்ததினம்

எனது அருமைக் கணவர் திரு. சுந்தரமூர்த்தி (பேராசிரியர் மதுரை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல் கல்லூரி) அவர்களின் முதல் சிரார்த்ததினத்தை முன்னிட்டு வண்ணை சிவன் கோவிலில் இன்று பகல் 12 மணிக்கு விசேஷ வழிபாடுகளும், மகேஸ்வர பூசையும் நடைபெறும். திருமதி தையல்நாயகி சுந்தரமூர்த்தி சிவன்கோவில் வண்ணார்பண்ணை. 141

---

### இலங்கையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இல் குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைத்த உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார். இக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், கல்லூரிப் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். திரு. கே. சதானந்தன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வடமாகாணத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் பட்டதாரிகள் கலந்து கொண்டார்கள்.

உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: பிரான்ஸ், மெக்சிக்கோ, மேற்கு ஜெர்மனி மற்றும் சில கம்யூனிஸ் நாடுகளிலும் சமூக அமைப்பை மாற்றுவதற்காக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த இயக்கத்திற்கு எங்கும் பட்டதாரிகளே தலைமை தாங்குகின்றனர்.

பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க நாங்கள் எடுத்த அத்தனை முயற்சிகளும் படுதோல்வி என்பதை பகிரங்கமாகக் கூறுகிறேன். எங்களின் சக்தியின் குறைவோ, சாதுரியம் இல்லாத காரணமோ, சரியான வழியைக் கடைப்பிடிக்காததன் விளைவோ தெரியவில்லை. பட்டதாரிகளைப் பொறுத்தவரை கல்லூரிகளில் வேலை வாய்ப்பு பெற பல முயற்சிகள் எடுத்தோம். எல்லா முயற்சிகளும் படுதோல்வி.

---

### மாணவியோடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறவேண்டும் என்று விரும்பிய தமிழ் பெற்றோர் தமது பெண்ணுக்கு சிங்களம் கற்பிக்க ஒரு சிங்கள ஆசிரியரை ஏற்பாடு செய்தார்களாம். சுமார் ஒரு வருட காலம் தொடர்பாக வந்து போன ஆசிரியர் திடீரென அந்தப்பெண்ணோடு மறைந்துவிட்டாராம். இப்பொழுது புத்தளம் பொலிசார் அந்த இருவரையும் தேடுகிறார்கள்.

---

### இருபதாண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து மேலும் பேசுகையில் உலகநாடுகள் எல்லாவற்றிற்கும் முன்மாதிரியாக இலங்கை அரசு தமிழ் மொழிக்கு உரியஇடம்கொடுத்து வருகின்றது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் மொழி தமிழாகவும் அதே நேரம் அரசாங்கம் தொடர்புகொள்ளும்மொழி தமிழாகவும் அதன் பிரதிகள் சிங்கள மொழியில் பதிலப்படும் உள்ளன. அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் புதிதாகச்சேர்ந்தவர்கள் சிங்களப்பாஷையில் தகுதியடையும் வரை தமிழ்மொழியில் கடமையாற்றவும் அவர்கள் சிங்கள அறிவு பெறுவதற்கு விசேட பயிற்சியும் கொடுக்கவேண்டும் எனகோரியுள்ளோம் நாம் வலியுறுத்திய விடயங்கள் நிறைசேரி 701ம் இலக்க அறிக்கை அமுல் நடாத்தப் படும்போது நன்கு தெரிவரும். பத்திரிகைக்கு அறிக்கைவிடுவதுடன் எமது பணி முடிவடையவில்லை, இங்குள்ள கிராமசேவையாளர் மற்றும் கச்சேரிகளில் கடமையாற்றும் சிறிய ஊழியர்கள் [illegible] வோம். என்றார்.

---

# 'சமசமாஜிகளுடன் இணையும் சாத்தியமே இல்லை'

## திரு. பொன்னம்பலம் அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு சமசமாஜக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் ஒருபோதும் இணைய முடியாது, அப்படி இணைவதற்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவுமில்லை என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நமது நிருபரிடம் கூறினார்.

தமிழ்க் காங்கிரசிற்கும் சமசமாஜக் கட்சிக்குமிடையில் கொள்கை ரீதியில் பலத்த வேறுபாடுகள் உண்டு. அவர்களோடு இணைவது குறித்து எத்தகைய பேச்சுகளும் நடைபெறவில்லை. அந்தக் கட்சிகளிலிருந்து விலகிய சிலர் இந்த மாதிரி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கலாம் என்று அவர் கூறினார்.

தமிழரசுக் கட்சியிலிருந்து வாலிபர்கள் ஏராளமானோர் விரக்தியுடன் வெளியேறி தமிழ்க்காங்கிரஸில் சேர்ந்துள்ளதாகவும், திருக்கோணமலையில் பல தமிழரசுவாதிகள் தமிழ்க்காங்கிரஸில் சேர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியினரும் கூட பலர் தமிழ்க் காங்கிரசில்சேர்ந்திருக்கிறார்கள் என்று திரு. பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டார்.

---

### விண்வெளிக்கு....

1ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் மூன்று விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவர்.

1-9-69ம் ஆண்டு முடிவதற்குள் விண்வெளியில் மனிதனை இறக்கலாமென அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

---

# ரயில் மீது கல் வீசுகிறார்களாம்

## பிரயாணிகள் புகார்

உடுவில், ஞாயிறு கொழும்பிலிருந்து வரும் மெயில் ரயில்வண்டி, கல்லோயா சந்தியைக் கடந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் நேரத்தில் இனந்தெரியாத நபர்களின் கல்லெறிக்குள்ளாகிவருகிறதாம்.

கடந்த நான்கு, ஐந்து தினங்களாகக் குறிப்பிட்ட புகையிரதத்திற்குக் கல்லெறியப்படுவதாகப் புகையிரதப் பிரயாணிகள் புகார் செய்துள்ளனர்.

இதனால் பிரயாணிகளொருவருக்கு நேற்று முன்தினம் சிறு காயமும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. புகையிரதப் பிரயாணிகள் சங்கம் இதுசம்பந்தமாகத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகையிரதப் பாதுகாவல் அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

---

# '300 தொழிலாளர் நன்மையடைகிறார்கள்'

அளவெட்டி, ஞாயிறு எமது சங்கம் பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் தொழில் தரம் பிரித்தல், சகல படிகளும் உட்பட சம்பள மாற்றம் என்பன முக்கியமானவை. இவற்றால் சுமார் 300 தொழிலாளர்கள் நன்மையடைகிறார்கள்.

இவ்வாறு காங்கேசன்துறை சிமெந்து உற்பத்தித் தொழிலாளர் சங்க 4-வது வருடாந்தக் கூட்டத்தில் திரு. எஸ். கி. விஜயநாயகம் பேசுகையில் கூறினார்.

சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. விஜயநாயகம் தொடர்ந்து பேசுகையில், தொழிற்சாலையில் கடமையாற்றும் தொழிலாளர்கள் தமது சேவைக் காலத்தில் இறந்தால் அவர் குடும்பத்துக்கு ஒரு வருட முழுச் சம்பளம் வழங்கவேண்டுமென்று எமது சங்கம் கட்டுத்தாபன நிர்வாகிகளிடமும், கைத்தொழில் அமைச்சரிடமும் கோரியதற்கு அங்கீகாரம் கிடைத்ததால் மரணமாகிய தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒருவருட முழுச்சம்பளம் கிடைக்கிறது என்று கூறினார்.

சங்கக் காரியதரிசி த. நாகராசா நன்றியுரை கூறினார்.

நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வெ. வீரசிங்கம், உபதலைவர் வி. சுப்பிரமணியம், காரியதரிசி: த. நாகராசா; இணைக் காரியதரிசி: மு. சண்முகம், தனாதிகாரி: கே. சுவாமிநாதன், கணக்காய்வாளர்கள் நிர்வாகசபை அங்கத்தவர் ஆ. பாலசுப்பிரமணியம்.

---

### அமைப்பாளராக தெரிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு திரு. வி. பொன்னம்பலம் யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் [ரஷ்ய] அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கைகம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரான இவர் யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிவருகிறார்.

---

### கல்லூரிகளுக்.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

க்குமிடையில் நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி திறமையாக விளையாடி எதிர்கோஷ்டியை 3—0கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. செல்லையா மத்தியஸ்தம்வகித்தார்.

மானிப்பாய் இந்து வெற்றி

உருப்பிராய்இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டிமிகவும்ரசிப்பாகவே காணப்பட்டது. இருசாராரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமலே விளையாடினர். இடைவேளையின்போது இருகோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடவில்லை. இடைவேளையின்பின் மானிப்பாய் இந்து ஒரு கோலைப் போட்டு எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. இப் போட்டிக்கு திரு. குமாரசாமி மத்தியஸ்தம் வகித்தார். [illegible]

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org